සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

## குடியியற் கல்வி - පුරවැසි අධ්‍යාපනය

தரம் : **6** நேரம்: 2 மணித்தியாலம்

| பெயர் /சுட்டெண்: |
|---|

**பகுதி I**

♦ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

♦ **சரியான விடையைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.**

1. பாடசாலைக்குச் சேர்ந்த முதல் மாணவன் பற்றிய விபரம் அறிய உதவும் ஆவணம் ......................................................... ஆகும்.
(பாடசாலை சம்பவத்திரட்டுப் புத்தகம் / மாணவர் சேர்வு இடாப்பு / பெயர் அட்டவணை)

2. இலங்கையின் நிருவாகப் பிரிவுகளுள் மிகச் சிறிய நிருவாக அலகானது ................................ ஆகும்.
(பிரதேச செயலாளர் பிரிவு / மாவட்டம் / கிராம உத்தியோகத்தர் பிரிவு)

3. சுய விபரக் கோவை மூலம் ஒரு மாணவனது ...................................................... பற்றி அறிந்து கொள்ளலாம்.
(வர்த்தகத் தகவல் / தனிப்பட்ட விபரங்கள் / கலாசார விபரங்கள்)

4. பௌதீக வளங்களைப் பாதுகாக்கும் சிறந்த முறையொன்றானது ........................................ ஆகும்.
(மீள் பாவனை / பொலிதீன் பாவனை / இரத்தினக்கல் சுரங்கம் அமைத்தல்)

5. பாடசாலைக்கு சட்டதிட்டங்கள் அவசியமாவதற்கு காரணம் .............................................. ஆகும்.
(தலைவர்களுக்கு மதிப்பளிக்க / சம்பிரதாயங்களைப் பாதுகாக்க / பாடசாலையை முறையாக நிருவகிக்க)

♦ **கீழே தரப்பட்ட கூற்றுக்கள் சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் அடைப்புக்குள் இடுக.**

6. திட்டமிடுவதாலும் ஒழுங்கமைப்பதனாலும் மாணவர்களுக்கு தன்னம்பிக்கை உருவாகும் ( )
7. பாடசாலை மாணவர் என்ற வகையில் கற்றல் நடவடிக்கைகளுக்கான வசதிகளைப் பெற்றுக்கொள்வது மாணவர் உரிமையாகும். ( )
8. மாணவர்கள் முறையற்ற நோக்கங்களை உருவாக்கிக் கொள்வது அவர்களினதும் சமூகத்தினதும் சிறந்த போக்கிற்கு வழி வகுக்கும் ( )
9. இயற்கை வளங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவது எமது கடமையாகும் ( )
10. பாதைகளை சுத்தம் செய்தல் மற்றும் பராமரித்தல் மாநகர சபையால் ஆற்றப்படும் சேவைகளுள் ஒன்றாகும். ( )

♦ **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

11. பாடசாலையின் தனித்துவத்தை அடையாளப்படுத்தும் இலட்சினைகள் இரண்டை மாத்திரம் கொண்ட விடையானது,
   1) பாடசாலை கீதம், இல்ல விளையாட்டுப் போட்டி
   2) புத்தகம் வழங்கும் வைபவம், சிறுவர் தின கொண்டாட்டம்
   3) பாடசாலை இலட்சினை, ஆசிரியர் தின கொண்டாட்டம்
   4) பாடசாலை சீருடை, பாடசாலைக் கொடி

12. மாணர்கள் தமது தனிமனித திறமைகளை அதிகரித்துக்கொள்வதற்குப் பயன்படுத்தக்கூடிய நுட்பம் ஒன்றானது
   1) பல்வேறு துறை சார்ந்தோரின் அனுபவங்களை மற்றும் அறிவுரைகளை பெற்றுக்கொள்ளல்
   2) தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்வையிடல்
   3) சம வயதுடையவர்களோடு கலந்தாலோசித்தல்
   4) சமூகத்திலிருந்து விலகி தனியாக செயற்படல்

13. பாடசாலை ஒழுங்கமைப்பில் கல்விச் செயற்பாடுகளின் தலைவராக செயற்படுபவர் யார்?
   1) பிரதி அதிபர் 2) மாணவத் தலைவர்கள் 3) அதிபர் 4) ஆசிரியர்கள்

14. வடமேல் மாகாணத்தின் நிருவாக மாவட்டங்களாவன
   1) குருநாகல் / கண்டி 2) குருநாகல் / புத்தளம்
   3) புத்தளம் / மாத்தளை 4) கேகாலை / புத்தளம்

15. பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னர் பாடசாலைக்குச் செல்வதற்காக மேற்கொள்ளக்கூடிய சிறந்த வழிமுறை என்ன?
   1) தாமதமாக நித்திரை கொள்ளல்
   2) நேரகாலத்தோடு நித்திரைகொள்ளல்
   3) தாமதமாக காலையில் எழும்புதல்
   4) நேர காலத்தோடு நித்திரை கொள்ளுதல் மற்றும் எழும்புதல்

♦ கீழே தரப்பட்டுள்ள படங்களை உபயோகித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

16. படத்தில் காட்டப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் மாணவராகிய நீங்கள் நிறைவேற்றும் கடமைகள் 2 குறிப்பிடுக.

   1)................................................................................
   2)................................................................................



A

17. வகுப்பறையில் மாணவர்களோடு ஒற்றுமையாக செயற்படும்போதுமாணவர்களிடம் காணப்பட வேண்டிய சிறந்த பண்புகள் 2 தருக.
   1)........................................................................... 2)................................................................................



B

18. படத்தில் காட்டப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் ஏற்படக்கூடிய விபத்துக்கள் 2 தருக.

   1)................................................................................
   2)................................................................................

19. நீங்கள் மேற்கூறப்பட்ட சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டால் உங்களில் காணப்பட வேண்டிய பண்புகள் 2 குறிப்பிடுக.
   1)........................................................................... 2)................................................................................

20. மேற்காட்டப்பட்ட படத்தில் உள்ளது போன்று உங்கள் பாடசாலையில் நீங்கள் பங்குபற்றிய சந்தர்ப்பங்கள் 2 தருக.
   1)........................................................................... 2)................................................................................

## பகுதி - II

- **முதலாம் வினா கட்டாயமானது**
- **முதலாம் வினா உட்பட இன்னும் 4 வினாக்களுக்கு வடையளிக்குக.**

1.




A

i) படத்தில் காட்டப்படும் சந்தர்ப்பத்தைப் பெயரிடுக. (2 புள்ளி)

ii) அவ்வாறான சந்தர்ப்பத்தில் உமக்கு உதவி செய்யும் இருவரை பெயரிடுக. (2 புள்ளி)

- கீழே தரப்பட்ட ABCD படங்களை கொண்டு வினா இலக்கம் (iii) மற்றும் (iv) இற்கு விடையளிக்க.



A B C D

iii) பௌதீக ஆற்றலை வெளிப்படுத்தும் படங்கள் எவை? (2 புள்ளி)

iv) உள ஆற்றலை வெளிப்படுத்துமும் படங்கள் எவை? (2 புள்ளி)



E


v) படத்தில் காட்டப்படும் சந்தர்ப்பத்தை பெயரிடுக. (2 புள்ளி)

vi) அவ்வாறான சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப்படும் மத ரீதியான சடங்கு ஒன்று குறிப்பிடுக. (2 புள்ளி)

vii) மேலே குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் உதவி செய்யும் சுயேற்சையான சங்கங்கள் இரண்டு குறிப்பிடுக. (2 புள்ளி)

viii) ஒற்றுமையாகச் செயற்படுவதனால் கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக. (2 புள்ளி)

2.




i) மேலே தரப்பட்டுள்ள ABCD இற்குப் பொருத்தமான குழுக்களை கீழுள்ள அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து எழுதுக.
(சாரணர் குழு, விஷேட இயக்கக் குழு, ஒழுக்காற்றுக் குழு, சட்டம் இயற்றும் குழு, சமயக் குழு, விளையாட்டுக் குழு, மரண சடங்குக் குழு)

(4 புள்ளி)

ii) தளபாடங்கள், ஆசிரியர்கள், புத்தகம், மாணவர்கள், உப அதிபர், நூலகம், விஞ்ஞான கூடம்

மேலுள்ள தகவல்களைக் கொண்டு கீழுள்ள அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| பௌதீக வளங்கள் | மனித வளங்கள் |
|---|---|
| 1............................................................<br>2............................................................<br>3............................................................<br>4............................................................ | 1............................................................<br>2............................................................<br>3............................................................ |

(7 புள்ளி)

3. “சேகர்” 6ம் தரத்தில் கல்வி கற்கும் ஒரு மாணவன். அவன் எப்பொழுதும் மாணவர்களுடன் சண்டை பிடிப்பான். ஆசிரியர்களிடம் பொய் சொல்வதுடன் சிறிய விடயங்களுக்கும் கோபம் கொள்வான்.

i) மேலே குறிப்பிடப்பட்ட பந்தியில் காணப்படும் ‘சேகர்’ எனும் மாணவனின் பலவீனங்கள் மூன்று குறிப்பிடுக. (3 புள்ளி)

ii) நீங்கள் மேலே குறிப்பிட்ட பலவீனங்களை குறைத்துக்கொள்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் 3 குறிப்பிடுக (3 புள்ளி)

iii) அ) உங்கள் வீட்டில் மகம் கொடுக்க நேரிடும் சவால்கள் 3 குறிப்பிடுக (3 புள்ளி)


ஆ) அச் சவால்களை வெற்றிகொள்ள நீங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் 2 குறிப்பிடுக. (2 புள்ளி)

4. i) கீழே தரப்பட்டுள்ள ‘அ’ பகுதியை ‘ஆ’ பகுதியுடன் பொருத்தமான முறையில் இணைக்க.

| **அ** | **ஆ** |
|---|---|
| 1) சேனக பிபிலே | • முகவரியை உறுதிப்படுத்தல் |
| 2) பிரதி அதிபர் | • மாணவர்களின் சுகாதாரத்தை பரிசோதித்தல் |
| 3) கிராம உத்தியோகத்தர் | • அரச ஒசுசல நிர்மாணித்தல் |
| 4) சீ.டப்.டப். கன்னங்கரா | • ஆசிரிய அபிவிருத்தி செயற்பாடு |
| 5) சுகாதார பரிசோதகர் | • இலவசக் கல்வியின் தந்தை |

(5 புள்ளி)

ii) கீழே தரப்பட்டுள்ள முக்கோணியினுள் கடமைகளும் உரிமைகளும் தரப்பட்டுள்ளன. அவற்றைக் கொண்டு கீழுள்ள அட்டவணையை பூரணப்படுத்துக.




| உரிமைகள் | கடமைகள் |
|---|---|
| 1.......................................................................<br>2.......................................................................<br>3....................................................................... | 1.......................................................................<br>2.......................................................................<br>3....................................................................... |

(6 புள்ளி)

5. i) பாடசாலையுடன் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தொடர்புபடும் நபர்கள் 4 குறிப்பிடுக.
(4 புள்ளி)

ii) பாடசாலையால் சமூகத்தை விழிப்புணர்வூட்டும் வகையில் நடாத்த முடியுமான நிகழ்ச்சிகள் மூன்று குறிப்பிடுக. (3 புள்ளி)

iii) அ) திட்டமிட்ட மாணவனிடம் காண்படும் பண்புகள் 2 தருக. (2 புள்ளி)

ஆ) திட்டமிடப்படாத மாணவனிடம் காணப்படும் பண்புகள் 2 தருக. (2 புள்ளி)